சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. **153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.9**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **25.04.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஆண்டிவேல் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

2,4,7,12,14 வது பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை

நான் திருச்சியில் குடியிருந்து பெரிய கடை வீதியில் பிளாஸ்டிக் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது தகப்பனார் 2019ம் ஆண்டு வாக்கில் இறந்துபோய்விட்டார். எனது அப்பாவின் கையொப்பம் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.30-ல் உள்ள மூன்றாவது பக்கத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து எனது தகப்பனார் உடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.31 ஆவணத்திலும் எனது தகப்பனாரின் கையெழுத்து உள்ளது. (வாதி மற்றும் ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற அழைப்பாணையில் மூன்றாம் தரப்பினரான மேற்படி சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட பொழுது ஆவணங்கள் பட்டியல் பற்றி எதுவும் குறிப்பிடாமல் சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களை கேட்பதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நல்லேந்திரன் மகன் என்பதற்கு நான் ஆவணங்கள் எதனையும்தற்பொழுது எடுத்துக்கொண்டு வந்தேனா என்றால் இல்லை. மேற்படி எனது தகப்பனாரின் (நல்லேந்திரன்) இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்த வந்த அழைப்பாணையில் சாட்சி சொல்ல வரவேண்டும் என குறிப்பிட்டு இருந்ததே தவிர எந்த ஆவணத்திற்காக சாட்சியம் அளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டு கூறவில்லை. நான்காவது பிரதிவாதியான கோபால் எனது மாமா மகன். அழைப்பாணை வந்தவுடன் நான் மேற்படி கோபாலை போய் பார்த்தேன். மேற்படி கோபால் என்னிடம் உயில் பத்திரத்தை என்னிடம் காண்பித்தார். அப்பொழுது தான் எனக்கு மேற்படி உயில் பத்திரம் பற்றியே விவரமே தெரியும் என்றால் சரிதான். மேற்படி உயிலில் என்ன

வாசகம் எழுதப்பட்டுள்ள என்கின்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது தகப்பனார் கையெழுத்து அரசு ஆவணங்களிலோ அல்லது கிரைய ஆவணங்களிலோ இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ.30 மற்றும் பி.வா.சா.ஆ.31 -ல் உள்ள எனது தகப்பனாரின் கையெழுத்து இல்லை என்றாலும் கோபால் எனது மாமன் மகன் என்பதாலும் அவர் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதி சீனிவாசன் எனக்கு மாமா முறை. மேற்படி மூன்றாவது பிரதிவாதிக்கு என்னுடைய சகோதரியை திருமணம் செய்து கொடுத்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.30 மற்றும் பி.வா.சா-ஆ.31 ஆவணங்களில் நல்லேந்திரனின் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி தரப்பில் மேற்படி ஐந்தாவது பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.